Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 01/2025**

Preliminary Register

Deposition of **PW- 7 LW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அமுதராணி | Husband Name | : | செல்வநாதன் |
| Village | : | புதுப்பட்டணம் | Taluk | : | தஞ்சாவூர் |
| Caste | : | | Calling | : | காவல் ஆய்வாளர்-(ஓய்வு) |
| Religion | : | | Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of February 2026.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் காவல் ஆய்வாளராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 18.06.2024ம் தேதி இரவு 10.00 மணியளவில் கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராஜ்கண்ணா என்ற ராஜா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 291/2024 ச/பி. 294(b), 324, 506(ii) IPC ன் கீழ் 19.06.2024, 12.00

மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் மனோபாலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் மற்றும் வரைபடம் முறையோ **அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ராஜாகண்ணு, ரமேஷ், ஜமுனா, அனுசுயா, பார்வை மகசர் சாட்சிகள் சரவணன் மற்றும் மனோபாலன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1-க்கு சிகிச்சையளித்த கும்பகோணம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முத்துகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட ராஜாகண்ணு மற்றும் அனுசுயா என்பவர்களுக்கு மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு நகல் **அ.த.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. ராஜாகண்ணு என்பவர்கள் தன்னிச்சையாக மருத்துவ சிகிச்சையில் இருந்து விடுவித்துக்கொண்டதால் மருத்துவர் காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்கவில்லை. இவ்வழக்கின் எதிரி ரவி த/பெ. கோவிந்தசாமி, கீழத் தெரு, கோவிந்தகுடியில் 19.06.2024 மதியம் 15.00 மணியளவில் ஆவூர் பஸ் ஸ்டாப் அருகில் நின்றுகொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைகளுக்கு பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கின் மற்றொரு எதிரி விக்னேஷ் என்பவர் நீதிமன்ற முன்பிணையில் சென்றுவிட்டதால் இவ்வழக்கில் அவரை கைது செய்யவில்லை. இத்துடன் என்னுடைய புலன்

விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளின் மீது ச/பி. 294(b), 324, 506(ii) IPC வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய விசாரணையில் அனைத்து சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை பற்றி கூறியுள்ளனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரர் புகாரில் செய்துள்ள கையொப்பத்திற்கும் நீதிமன்றத்தில் செய்துள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 13 வது காலத்தில் அ.சா.1 க்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுத்து கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். புகார் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் அ.சா.4 அனுசுயாவை தாக்கியதாகவோ காயம் ஏற்பட்டதாகவோ எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.5இல் காயம் குறித்த கருத்துரை வழங்கியதற்கான குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான். ஆனால் மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றபோது அதில் ராஜகண்ணுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று கூறினார். அ.த.சா.ஆ.5 ல், "1 known person என்ற இடத்தில் 2 known person's என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தம் மருத்துவரால் செய்யப்பட்டது. மேற்படி திருத்தம் மருத்துவரால் செய்யப்பட்டது என்பதற்கு மருத்துவரின் சுருக்கொப்பமோ, முத்திரையோ இல்லை என்றால் சரிதான். மேற்படி திருத்தம் மருத்துவரால் செய்யப்படவில்லை என்பதால்தான் அதில் எவ்வித

மேற்குறிப்பும் இல்லை அசலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தடயப்பொருளாக ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். எதிரியை விசாரணை செய்தபோது ஆயுதம் வைத்த இடம் பற்றி தெரியவில்லை என்று சொன்னதால் மேற்படி ஆயுதத்தினை கைப்பற்றவில்லை. எதிரிகளை விசாரணை செய்தேன் என்பதற்கு எந்த ஆவணமும் பதிவு செய்து நீதிமன்றத்தல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நபர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் சம்பவநேரத்தில் அங்கு இல்லை என்று சொன்னதால் அவர்களை விசாரிக்கவில்லை. மேற்படி நபர்கள் சம்பவநேரத்தில் அங்கு இல்லை என்ற விபரத்தினை நான் எனது விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் கூறியுள்ள, "அன்றைய தினம் இரண்டு முறை சண்டை நடந்ததாகவும் முதல் சண்டையில் எதிரி ரவி அங்கு இல்லை என்றும் பின்பு நான் போலீசாரிடம் போனில் தகவல் தெரிவித்து போலீசார் அங்கு வந்தபோது ஆஜர் எதிரி 20 நபர்களுடன் வந்து எனது வீட்டிற்கு போலீஸ் எப்படி வரலாம் என்று கூறி எங்கள் குடும்பத்தினர் அனைவரையும் தாக்கினார்" என்று எனது விசாரணையிலோ புகாரிலோ கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் கூறியுள்ள, ""மழை பெய்து கொண்டிருந்தபோது மாலை 5, 5.30 மணியளவில் எங்களுக்கு சொந்தமான வைக்கோல் போரை படுதாவினால் மூடச் சென்ற போது விக்னேஷ்க்கும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது

என்னை குச்சிகாரி மகனே என்ற வார்த்தைகளால் திட்டினார். அதன்பிறகு விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாறையால் என்னை தாக்கினார்" என்று எனது விசாரணையிலோ புகாரிலோ கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் தனது மனைவியை ஆஜர் எதிரிகள் தாக்கியதாகவோ காயம் ஏற்பட்டதாகவோ கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் கூறியுள்ள, “"எங்கள் வீட்டுக் கொல்லைப்புரம் உள்ள வைக்கோல் போருக்கு நானும் எனது மகனும் படுதா போட்டு மூடினோம். அப்போது ஆஜர் 1வது எதிரி மது போதையில் குச்சிகாரி மகனே தேவுடியா மகனே என்று எங்களை திட்டினார். நான் வைக்கோல் போரின் மேல் நின்று படுதா போட்டுக்கொண்டிருந்தேன், அப்போது விக்னேஷ் கல்லால் என்னை அடித்தார். நான் வைக்கோல் போர் மேலிருந்து கீழே இறங்கிவிட்டேன். எனது மகன் அ.சா.1 யாரை பேசுகிறீர்கள் என்று கேட்டார். அப்போது ஆஜர் 1வது எதிரி தெருபக்கம் சென்ற எனது மகனை பாரையால் குத்த வந்தபோது எனது மகன் கையால் தடுத்துள்ளார், அதில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. நான் உடனே 100க்கு போன் செய்தேன். அரைமணி நேரம் கழித்து போலீசார் வந்தார்கள், அப்போது நன்றாக மழை பெய்தது. இரண்டாவது எதிரி ரவி ஒரு பத்து நபர்களுடன் வந்து வீட்டில் உட்கார்ந்திருந்த எங்களை ஜாதி பெயர் சொல்லி திட்டி அடித்தார். அதில் எங்கள் வீட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு மீண்டும் நான்கைந்து போலீசார் வரவும் எதிரிகள் சம்பவயிடத்தை விட்டு சென்று விட்டார்கள்.” என்று எனது விசாரணையிலோ புகாரிலோ கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.3 எனது விசாரணையில் 1 வது எதிரி தனது கணவரை தகாத

வார்த்தைகளால் பேசி கல்லால் அடித்தார் என்று கூறியுள்ளாரா என்றால் இல்லை ஆஜர் எதிரிகள் இருவரும் திட்டியதாக கூறியுள்ளார். ஆஜர் 1 வது எதிரி பாறையால் எடுத்துகொண்டு வந்து எனது மகனை குத்தவந்தார், அதனை தடுத்துபோது எனது மகனுக்கு கையில் இடது கையில் காயம் ஏற்பட்டது என்றும் போலீஸ் எண் 100 க்கு தகவல் கொடுத்தேன் தகவல் பெற்று போலீசார் ஒருவர் சம்பவயிடத்திற்கு வந்தார். ஆஜர் எதிரிகள் 20 பேரை அழைத்துக்கொண்டு வந்து போலீசார் எப்படி எங்கள் வீட்டிற்கு வரலாம் என்று கூறி எனது குடும்பத்தினரை தாக்கினர் என்று எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. ஆஜர் 1 வது எதிரி தகாத வார்த்தைகளால் திட்டும்போது யாரை திட்டினார் என்று தெரியவில்லை என்றும், ஜாதி பெயர் சொல்லி திட்டும்போதுதான் எங்களைதான் திட்டினார் என்று தெரிந்தது என்றும் எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. ஆஜர் 1 வது எதிரி கல்லால் எனது கணவரையும், மாமனாரையும் அடித்தார் என்று எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. ஆஜர் 1 வது எதிரி விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாரையை எடுத்துவந்து அ.சா.4ன் கணவரை தலையில் குத்த வந்தார், அதை அ.சா.4ன் கணவர் தடுத்ததில் அ.சா.4ன் கணவருக்கு இடது உள்ளங்கையில் பாரை குத்தி காயம் ஏற்பட்டது என்று எனது விசாரணையில் கூறவில்லை என்றால் இல்லை. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் 2வது எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து இவ்வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எவ்வித விசாரணையும்

செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.05 17:34:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.